Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 5 ஆம் நாள் துல்ஹஜ் 4 (17-4-64 வெள்ளிக்கிழமை இதழ் 66

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# பிரதமர் - என் எம். அடுத்தவாரம் சந்திப்பர்

## கூட்டு அரசாங்கம் பற்றி மேலும் முயற்சிகள்

கொழும்பு, வெள்ளி

பிரதமர் நுவரேலியவிலிருந்து திரும்பியதும் அடுத்தவாரம் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் சார்பில் சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பிரதமரைச் சந்திக்கவிருக்கிறார்.

அரசாங்கத்துடன் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒத்துழைப்பது பற்றியோ அல்லது கூட்டு அரசாங்கம் அமைப்பது பற்றியோ இடதுசாரி முன்னணி சார்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு இடதுசாரி ஐக்கியமுன்னணியின் கூட்டு மத்திய கமிட்டி டாக்டர் என். எம். பெரேராவைக் கோரியுள்ளது. சமீபத்தில் நடைபெற்ற மேற்படி கமிட்டிக் கூட்டத்தில் இவ்விதம் தீர்மானிக்கப்பட்டது.

**சுதந்திரக்கட்சி எம். பி. அபிப்பிராயம்**

சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான குருநாகலை எம். பி. திரு. ஜெயபத்திரான, சுதந்திரக் கட்சி அரசாங்கம் இடதுசாரி ஐக்கியமுன்னணியுடன் கூட்டு சேர்வதை ஆதரித்துள்ளார்.

சுதந்திரக்கட்சி அரசாங்கமும் இடதுசாரி ஐக்கியமுன்னணியும் கூட்டரசாங்கம் அமைப்பதற்கான முயற்சிகள் அடுத்த மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகலாமென திரு. ஜெயபத்திரான தெரிவித்துள்ளார்.

இவ்வித கூட்டரசாங்கம் அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான காலத்திலிருந்து, மனத்தளர்ச்சியடைந்து, பிரிந்திருந்த முற்போக்குசக்திகள் புது உற்சாகமடைந்துள்ளன என்றும் கூக்கிரலிட்டு வந்த யு. என். பி. இப்போது இதன் காரண

(6ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகரசபை கார்ப்பரேஷன் ஆகும்?

### மூவர் கமிட்டி நியமனம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு மாநகரசபையின் அந்தஸ்தை உயர்த்துவது பற்றி ஆராய மூவர் கமிட்டி ஒன்றை தலஸ்தாபன மந்திரி நியமித்திருக்கிறார்.

இந்தக் கமிட்டியில் திரு. மகாதந்தில, மாநகரசபை கமிஷனர் திரு. பி. ஜயசிங்க, உதவி ஆடிட்டர் ஜெனரல் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்.

பம்பாய், டில்லி ஆகிய நகரங்களிலுள்ளதைப் போல் உயர் அந்தஸ்து பெற்ற முனிசிபல் கார்ப்பரேஷனாக கொழும்பு மாநகரசபையை உயர்த்துவது பற்றி இவர்கள் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என மாநகரசபை அதிகாரி ஒருவர் கூறினார்.

கார்ப்பரேஷன் அந்தஸ்துக்கு மாநகரசபை உயர்த்தப்பட்டால், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு முடிந்தவரை குறைக்கப்படும்.

விசேஷ கமிட்டி விரைவில் கூடுமென அறிவிக்கப்படுகிறது

கல்விழான் கொலை முயற்சி வழக்கு

## சம்பவம்நடந்த இடத்தை நேரில் பார்வையிட முடிவு

### நீதியரசர், ஜூரிசபையினர் இன்று 75 மைல் பிரயாணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கல்விழான் கொலை முயற்சி வழக்கு சம்பந்தமாக சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிடுவதற்காக இன்று காலை 8-30 மணிக்கு, நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி., முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஏ. ஏ. டி. சில்வா, எதிரியின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், ஜூரிசபையினர் எதிரி, மாதிரிப்படம் வரைந்தவர் ஆகியோர் இங்கிருந்து 75 மைல்களுக்கு அப்பாலுள்ள கல்விழானுக்கு விஜயம் செய்வர்.

சம்பவம்நடந்த இடத்தைப் பார்வையிடவேண்டுமென எதிரியின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் செய்துகொண்ட விண்ணப்பத்தைத் தொடர்ந்து நீதியரசர் 'சம்பவம்

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரதமருக்கு இன்று 48 வயது

கொழும்பு, வெள்ளி

பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகாவுக்கு இன்று 48-வது பிறந்ததினம். சோவியத் பிரதமர் குருஷ்சேவுக்கு இன்று 70-வது பிறந்ததினம்.

### அறிவித்தல்

யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபாவின் இசை விழா இம்முறை வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயிலின் முன்றலில் நடத்தப்படாததற்குக் கோயில் முகாமைத்தர்மகர்த்தா அனுமதிதரவில்லை என்ற வதந்தி ஆதாரமற்றது.

து. சீனிவாசகம்,
வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப்
பெருமாள் கோயில் முகாமைத் தர்மகர்த்தா.

யாழ்ப்பாணம், 16-4-64.

## தியாகி பதவி ஏற்றார்

புதுடில்லி, ஏப். 16

திரு. மகாவீர் தியாகி இந்திய மந்திரி சபையில் மறுவாழ்விப்பு மந்திரியாக இன்று பதவி ஏற்றார். ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அவருக்கு பதவிப் பிரமாணத்தையும், இரகசியக் காப்பு பிரமாணத்தையும் செய்து வைத்தார். இந்த வைபவத்தில் பிரதமர் நேருவும் கலந்து கொண்டார். திரு. மேஹர்சந்த் கன்னா விட்டிருந்த மறுவாழ்விப்பு மந்திரி பதவியை திரு. தியாகி ஏற்றார். திரு. கன்னா மராமத்து வீடமைப்பு மந்திரியாகப் பதவி ஏற்றார்.

## "ஸ்தல இளைஞர்களுக்கே பயிற்சி அளிக்கவேண்டும்"

### காங்கேசன் சிமெந்தி ஆலைபற்றி எஸ். ஜே. வி. கடிதம்

நல்லூர், வெள்ளி

"சிமிந்தித் தொழிற்சாலையில் பயிற்சி பெற இப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். இனிமேல் நடைபெறும் தெரிவு முறைகளை மாற்றியமைக்க வேண்டும்" என்று காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சிமிந்திக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை தொழிற் பயிற்சி சம்பந்தமாக திரு. செல்வநாயகம் எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை எனது தேர்தல் தொகுதியில் உள்ளது. இத்தொழிற்சாலையில் புதிதாகத் தொழில் பயிற்சி பெற சிமிந்திக் கூட்டுத்தாபனம் கொழும்பிலிருந்து ஆட்களைத் தெரிந்தெடுத்து அனுப்புவதாக பொதுமக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர். இவ்வாறு தொழிற்பயிற்சி பெறுவதற்கு தகுதி வாய்ந்த இளைஞர்கள் பலர் காங்கேசன்துறையிலும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களிலும் இருந்தும் கொழும்பிலிருந்து ஆட்கள் தெரிவு செய்யப்படுவது பற்றியும் பொதுமக்கள் என்னிடம் தெரிவித்தனர். இந்த வேலைகளுக்கு விளம்பர முன் அறிவித்தல் மூலம் மனுக்கள் கோரி தொழிற்சாலைக் காரியாலயத்தில் வைத்தே ஆட்களைத் தெரிவு செய்ய வேண்டுமெனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சென்ற தடவை ஆட்கள் தெரிவு நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்ட 33 பேர்களில் இரண்டு பேர் மட்டுமே எனது தொகுதியைச் சேர்ந்தவர்கள்.

ஜே. எஸ். சி., எஸ். எஸ். சி. தராதரமுடைய 150 வாலிபர்கள் உட்பட 300 இளைஞர்கள் தினசரிச் சம்பளம் பெறுபவர்களாக வேலை பார்த்து வந்தபோதிலும் இவர்களில் யாருக்கும் தொழில் பயிற்சி பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

(6-ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் புதிய தபால் நிலையம்பற்றி மந்திரிக்கு கடிதம்

### அடுத்த பட்ஜட்டில் நிதி ஒதுக்க கோரிக்கை

நல்லூர், வெள்ளி

காங்கேசன்துறையில் புதிய தபால் நிலையம் அமைக்கப்படுவதக்கென மத்திய நிலையத்தில் காணி வாங்கிப் பல வருடங்களாகியும் இதுவரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருப்பது பற்றி காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தபால் மந்திரியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

திரு. செல்வநாயகம் தபால் மந்திரிக்கு தபால் கந்தோர் சம்பந்தமாகக் கடிதமொன்று அனுப்பியுள்ளார் அவர் தமது கடிதத்தில் காங்கேசன்துறையில் புதிய தபால் நிலையம் நிறுவப்படுவதற்கு வேண்டிய செலவுத் தொகை பற்றி கடந்த வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களில் கேட்கப்பட்டதாயினும் தகுந்த முயற்சி மேற் கொள்ளப்படவில்லை என்றும், அடுத்த வரவு செலவுத் திட்டத்திலாவது நிதி ஒதுக்கித் தருமாறும் கேட்டுள்ளார்.

இதுவரை காலமும் தபாற் கந்தோர் நிலையமாக உபயோகிக்கப்பட்டு வந்த கட்டிடம் கடந்த சில மாதங்களாகச் சீர்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தபால் ஊழியர்களுக்கு வேண்டிய வசதிகள் இல்லை என்றும் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன் புதிய தபால் கந்தோர் அமைப்பதற்காக காணி அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டது. இக்காணியில் புதிய தபால் நிலையத்தினை அமைக்கும் முயற்சியை மேற்கொள்ளும்படி பல பொதுஸ்தாபனங்கள் அரசாங்கத்தை கேட்டுள்ளது.

## மணிவாக்கு

என் சுயநலனுக்காக நான் வாழ்கின்றேனா? அல்லது நீதிநியாயத்துக்காகவா? என் நன்மைக்காகப் பிறரைச் சுரண்டுகின்றேனா? அல்லது பரிசுத்தமாக வாழ்கின்றேனா? பரிபூரண சுத்தமென்பது நம் எண்ணங்களையும் உள்ளிட்டதாகும்.

—டாக்டர் பால் காம்பெல்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

பாட்டுப்பணை குரோதி ஆண்டு
சித்திரை மீ 5 உ (17-4-64)

## குடியிருப்புப் பிரச்னை

அரசாங்க ஊழியர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக இரண்டரைக் கோடி ரூபாய் கடன் அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகின்றது. இது உண்மையாயின் இது வெறும் கண்துடைப்பேயாகுமேயன்றி, பொதுவாக இந்நாட்டில் அதிகரித்துவரும் வீடில்லாப் பிரச்னையைத் தீர்க்க ஓரளவும் உதவாது.

ஏற்கெனவே அரசாங்கஊழியரில் சிலர் தங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள இடம் வாங்குவதற்காக தங்கள் இரண்டுவருட சம்பளத் தொகையை கடனாகப் பெற்றுள்ளனராம். ஆனால் அவ்விடத்தில் வீடுகட்டிக் கொள்ளப் பணம் இல்லை என்றும் ஆப்பேர்ப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகவே ஆளுக்கு 15 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் கடன் உதவி அளிப்பதென்றும் இதற்காக இரண்டரைக் கோடி ரூபாய் ஒதுக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

இதன்படி சுமார் இரண்டாயிரம் அரசாங்க ஊழியர் கடனுதவி பெறக்கூடும். ஆனால் நிலத்துக்காகவும் வீட்டுக்காகவும் அவர்கள் வாங்கியுள்ள கடனைத் தவணையாகச் செலுத்த அவர்களால் முடியுமா என்பது முக்கியமான கேள்வி. மேலும் அரசாங்க ஊழியர் வெவ்வேறு இடங்களுக்கு உத்தியோக மாற்றம் செய்யப்படுகையில் இவ்வீடுகளில் அவர்கள் குடியிருக்கவும் முடியாது போகும். அரசாங்க ஊழியர்கள் கடன் பளுவு காரணமாக தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாமலும் பல ஊழல்களுக்கு இடமேற்பட்டு நிர்வாகம் மோசமடையவும் இடமேற்படலாம். ஆகையால் இந்தக் கடனுதவித் திட்டம் "அதிர்ஷ்டமுள்ள" சில அரசாங்க ஊழியர்களுக்கும் நன்மையைவிட அதிக தீமையையே செய்யக்கூடும்.

இதேசமயம் ஜனத்தொகை வரவர அதிகரித்துவருவதாலும் நகர்ப்புறங்களில் வேலைதேடிப் பல குடும்பங்கள் குடியேறுவதாலும் பொதுமக்களிடையே குடியிருப்புப் பிரச்னை வரவர அதிகரித்து வருகின்றது. இது மிகப்பெரிய பிரச்னை. இதைத் தீர்க்க அதிக காலமும் பணமும் தேவைப்படும். இதற்கான திட்டம் அமைத்து, அதை நடத்திவைக்க வேண்டியது மிகவும் அவசியமான வேலையாகும். ஆனால் இது பற்றி அரசாங்கம் விரிந்த முறையில் ஒருதிட்டம் அமைத்து அதை நடத்திவைக்க எவ்வித முயற்சியும் எடுப்பதாகத் தெரியவில்லை.

இந்தியா முதலிய நாடுகளில் இப்பிரச்னையைத் தீர்க்கப் பல கூட்டுறவு ஸ்தாபனங்களும், இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷன்களும் முன்வந்துள்ளன. பாலிஸிதார்களுக்கு வீடு கட்டுவதற்காகக் கடன் கொடுத்து, அந்தக் கடனை வாடகை போல் சுலபமான தவணைகளில் மாதாமாதம் வசூலித்து, சில வருடங்களுக்குள், கடன் தீர்ந்ததும் அந்த வீடு அப்பாலிஸிதாதர்களுக்கே சொந்தமாகிவிடும் முறையில் ஒரு நல்ல திட்டம் அமுலிலிருந்துவருகின்றது. அதேபோல அரசாங்கம் இங்கும் ஏற்பாடுசெய்தால், குடியிருப்புப் பிரச்னை ஓரளவு தீருவதுடன், பலருக்குச் சொந்தத்தில் வீடு கிடைப்பதாகவுமிருக்கும்.

வீடு கட்டுவதற்கு முக்கியமாக வேண்டிய சீமெந்தி முதலிய கட்டடப் பொருட்களின் விலை அதிகரித்து, அவற்றுக்குத் தட்டுப்பாடும் ஏற்படுகின்றது. கூலி விகிதங்களோ மிகவும் அதிகரித்துள்ளன. இதனால் சிறப்பாக நடுத்தர வருமானமுள்ள குடும்பங்களும் எளிய குடும்பங்களும் தங்களுக்குச் சொந்தமாகச் சிறிய வீடும் கூடக் கட்டிக்கொள்ளமுடியாமலுள்ளது. அவர்களது கஷ்டங்களைத் தீர்க்க உதவுவதே அரசாங்கத்தின் முதல் கடமை. அரசாங்கத்தின் வசமுள்ள நிலங்களை நீண்டகால ஒப்பந்தத்தில் இலவசமாகக் கொடுத்தும் வேறு விதங்களில் உதவி செய்தும் அவர்களது குடியிருப்புப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும். மாநகரசபை உள்ளிட்டு,பல ஸ்தலஸ்தாபனங்களும் இவ்வித சேவையைச் செய்ய அரசாங்கம் அவற்றுக்குள்ள எல்லா வாய்ப்பும் வசதியும் செய்து கொடுக்குமாயின், இந்த தேசியப் பிரச்னை படிப்படியாக ஓரளவாவது தீரவழிபிறக்கும்.

## மாநகரசபையில் திடீர் அதிசயங்கள்!

கொழும்பு, வியாழன்

கொழும்பு மாநகரசபையின் விசேட கூட்டத்தை மாநகரசபைக் கமிஷனர் திரு. ஏ. வி. சின்னையா கூட்டியபோது மூன்று ருசிகரமான சம்பவங்கள் நிகழ்ந்தன.

உதவி மேயர் பதவியிலிருந்து திரு. எஸ். வி. பெர்னாண்டோ விலகியதால் உதவி மேயர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காகவே இவ் விசேஷ கூட்டம் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் திரு பெர்னாண்டோ தமது ராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொண்டதாக இன்னொரு அங்கத்தவர் தெரிவித்தார். அப்படி வாபஸ் பெறமுடியாதென கமிஷனர் தெரிவித்து கூட்டத்தை நடத்தினார். திரு. வி. காரியகறவண உதவி மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதையடுத்து திடீரென ஒரு அங்கத்தவர் மேயர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தார். மேயர் தாம் தமது கடமையை சரிவரச் செய்துள்ளதாகவும், நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தவருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதன்பின்னர் அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்திட்டவர்கள் தாம் அதிலிருந்து வாபஸ்பெறுவதாகத் தெரிவித்தனர்.

கலைச் சிந்தனைகள்

## வாழும்போதே விழாவைப்போம்

இசைத்துறையில் ஈடுபட்ட சில பிரமுகர்களை யாழ்ப்பாணத்திலுள்ள இசை ஆசிரியர் சங்கம் நேற்று முன்தினம் உபசரித்து விருதுகள் அளித்தது மிகவும் விரும்பத்தக்க விஷயம். மறைந்து மறந்து போனவர்களை அல்ல, இன்றும் உயிரோடு இருப்பவர்களை!

கலைஞன் உயிரோடிருக்கும்போது அவனுக்குத் தக்க மரியாதையும் கௌரவமும் அளிப்பது தான் முறையான செயல். அவன் செத்தபிறகு அவனுக்கு "குடாபிஷேம் செய்வது, உயிரோடிருக்கும் வரை சோற்றுக்குத் திண்டாடியவனுக்குக் கோலாகலமாய் மரணச்சடங்குகள் செய்வதை ஒத்தது.

கலைத்துறையில் தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள் —சங்கீதக்காரரோ, நாடகாசிரியரோ, நடிகரோ, ஓவியரோ — ஒரு சொற்பகாலத்துக்குத்தான் முழுப்பிரகாசிகையுடன் சுடர்விட்டு ஜொலிப்பார்கள். பத்து அல்லது பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் அவர்கள் புகழேணியின் உச்சியில் இருப்பது மிகவும் துர்லபம். அந்தச் சொற்பகாலத்தில் ரசிக மகாஜனங்கள் அந்தக் கலைஞரை ஏற்றிப் போற்றி வாழ்த்துவார்கள். அதன்பின் அவர் இருந்த இடமே தெரியாமல் மங்கிப் போவார். இது கலையுலகில் நிகழும் ஒரு சாதாரண சம்பவம். உலகிலேயே மிகச் சிறந்த நாடகாசிரியர் என்று மதிக்கப்படும் ஷேக்ஸ்பியரை அவரது வாழ்நாளில் ஒரு வெறும் நாடகாசிரியர் என்றே மதித்துவந்தார்கள். இன்று 400 வருடங்கள் கழிந்த பின்பு உலகெங்கும் அவருடைய பிறந்த (இறந்த) தினம் வெகு படாடோபமாகக் கொண்டாடப்படுகிறது.

கம்பன் தனது இராமாயணத்தை அரங்கேற்றுவதற்கே எவ்வளவோ கஷ்டப்பட்டான். இன்று தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதிலும் கம்பன் விழா நடக்கிறது. இது கலைஞர்களுக்கே உரித்தான ஒரு பிறப்புரிமை போலும். இருக்கும்வரை அவர்களைக் கவனிப்பார் கிடையாது. இறந்த பின் விழா எடுப்பார்கள், சிலை வைப்பார்கள்.

இசை ஆசிரியர் சங்கம் கௌரவித்த கலைஞர்கள் தமது உச்சிக்காலத்தில் ஊரெங்கும் புகழ் நாட்டினார்கள். மாவிட்டபுரம் ராஜா, உருத்திராபதி, சாவகச்சேரி அப்புலிங்கம் முதலிய நாகசுர வித்வான்கள் திருவிழாக் காலங்களில் சனம் திரட்டிகள். அவர்களுடைய கச்சேரி என்று கேள்விப்பட்ட மாத்திரத்தே பல ஊர்களிலுமிருந்து ஜனங்கள் சாரை சாரையாக கோவில்களுக்கு வருவார்கள். கொஞ்சக்காலத்துக்குத் தான் அவர்களுடைய கீர்த்தியும் பெருமையும் ஓங்கி நின்றன. பின்னர் நோய், மூப்பு, பிணி, மிடி முதலியவற்றால் அவர்களுடைய வல்லமை குன்றிவிட்டது. இளம் வயதில் இருந்த சுறுசுறுப்பும், சக்தியும் குறைந்து விட்டன. அவர்களை ரசிக மகா ஜனங்கள் மறந்து விட்டார்களோ என்று ஏங்கி இருந்தபோது இந்த விருது விழா நடந்தது பன் முறையும் வரவேற்கத்தக்க விஷயம். வாழும்போதே விழா எடுத்துவிட்டோம். கலைஞர் பெருமக்களுக்கு நாம் செய்ய வேண்டியகடன் தீர்ந்தது......தீர்ந்து விட்டதா? ஒரு சந்தேகம் எட்டிப்பார்க்கிறது.

கலைஞர்களுக்கு விருதுகளும் பட்டங்களும் கொடுத்து விட்டால் மட்டும்போதுமா? வாலிப வயதில் எங்களை மகிழ்வித்தவர்கள். இன்று தள்ளாதவயதில் தவிக்கிறார்கள். மனச் சாந்திக்காக கௌரவப்பட்டங்களை வழங்குகிறோம். உடல் சாந்திக்கு என்ன செய்வது? அவர்களென்ன அரசாங்க உத்தியோகஸ்தர்களா பென்ஷன் வாங்குவதற்கு? எவ்வளவு தான் ஒரு கலைஞனை நாவாரப்போற்றினாலும் அது அந்த சணத்தில் அந்த மேடையில் மறைந்து விடுகிறது. அவன் வீடுதிரும்பினால் மறுபடியும் மறைந்து மறந்துபோன கலைஞனாக மாறிவிடுகிறான். இதற்கென்ன வழி?

இசை ஆசிரியர் சங்கம் போன்ற சங்கங்கள் இவர்களுக்கான ஒரு சகாய நிதி ஏற்படுத்தி, அதில் கண்ணியமான உத்தியோகஸ்தர்களை நியமித்து, கலைஞர்கள் நன்றாக உழைக்கும்போது அவர்களிடமும், தயாள சிந்தனையுள்ள பொது மக்களிடமும், பணம் திரட்டி பிற்காலத்தில் அவர்கள்சந்தோஷமாக வாழ்வதற்கு வழி வகுக்கவேண்டும். பட்டத்தைமட்டும் வழங்கிவிட்டால் போதுமானதாகாது. கலைஞர்களுக்கு உருப்படியாக ஏதாவது உதவி செய்வதுதான் அவர்களை கௌரவிப்பதற்கு சிறந்த மார்க்கம்.

— 'லாவண்யம்'

பத்திரிகையாளர்களாக

## திறமையுள்ளவர்களை விடுத்து பட்டதாரிகளை அமர்த்துகின்றனர்

### கமிஷன் முன் கருணதிலகா

கொழும்பு, வியாழன்

சில பத்திரிகைக் கம்பனிகள், பட்டதாரிகளையே பத்திரிகையாளர்களாக பயிற்சி பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கின்றனவென்றும் பல வருடகால அனுபவமும் திறமையும் உள்ள பத்திரிகையாளர்களை அவர்கள் பட்டதாரிகளல்லாதவர்கள் என்பதற்காக வேலைக்கமர்த்துவதில்லையெனவும் நேற்று பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் முன்னாள் எம். பி. யும், பத்திரிகையாளருமான திரு. நிமால் கருணதிலகா தெரிவித்தார். இலங்கை பத்திரிகைச் சங்கத்தின் சார்பில் சாட்சியமளிக்கையில் திரு. நிமால் கருணதிலகா மேலும் குறிப்பிட்டதாவது:-

இலங்கை பத்திரிகை சங்கம் பத்திரிகை முதலாளிமார்களின் ஆதரவுடன் இயங்குவதாக இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் சாட்சியமளித்த திரு. ரத்னதேசப்பிரியா கூறியது உண்மைக்கு புறம்பானதும் ஆதாரமற்றதுமாகும். எமது சங்கம் பிற்போக்குச் சங்கமுமல்ல. இலங்கை பத்திரிகையாளர்கள் சங்கம் நாட்டின் நலனில் அக்கறை கொள்ளாது நம் நாட்டு நடுநிலைமை கொள்கைக்கு புறம்பான வகையில் நடந்து கொள்ளும் குழுவுடன் தொடர்புடையது. சீனாவின் பிரசார கருவியாக கருதப்படும் ஆபிரிக்க-ஆசிய கூட்டணியுடன் தொடர்புள்ளது. சர்வதேச மகாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்டு எமது நாட்டினதும் பிரதமரினதும் வெளிநாட்டுக் கொள்கைக்கு அவமானம் தேடிக்கொடுத்தது. எமது சங்கம் கட்சி சார்பற்றது. சீன-ரஷ்ய கருத்து வேறுபாட்டுப் பிரச்னைகளில் நாம் கலந்து கொள்ளவில்லை.

பத்திரிகையாளர்களாக முன்பு கடமையாற்றி இப்பொழுது வேறு வேலைகளில் ஈடுபட்டோ ஓய்வு பெற்றோ இருப்பவர், பத்திரிகைகளுக்கு எழுதும்வரை பத்திரிகையா

5-ம் பக்கம் பார்க்க

## ஐயாறன் எழுதுவது

பகல் 12 மணி. ஓர் அன்பரின் வீட்டுக்குப் போயிருந்தேன். வெளியிலே அனல் காற்று வீசுகிறது. உஷ்ணம் தாங்க முடியவில்லை. ஆனால் அந்த அன்பரின் வீட்டுக்குள்ளே 'குளுகுளு'வென்றிருந்தது. ஏதோ 'ஏர்கண்டிஷன்' செய்து குளிருட்டி இருப்பதாக நினைக்கவேண்டாம். அது ஒரு கூரைவீடு. மண்சுவரால் கட்டி மேலே கீற்றால் வேய்ந்திருந்தார்கள் சுற்றிலும் மரங்கள். வெயிலே தெரியவில்லை.

குளிர்காலத்திலும்கூட இந்த வீடுகள் குளிருக்கு அடக்கமாக இருக்கும். இவ்வீடு கட்ட இரண்டொரு ஆயிரம் போதுமானது!

ஆனால் பல்லாயிரம் ரூபாய்கள் செலவழித்து ஓட்டுக் கட்டடமும் மச்சுக் கட்டடமும் டாம்பீகமாகக் கட்டுகிறோமே, அந்த வீடுகளில் இக்காலத்தில் பகலிலும்சரி, இரவிலும் சரி இருக்கவும் முடிகிறதா? மின்சாரவிசிறிமூலம் வீசுவதும் அனல் காற்றுத்தான்!

* * *

எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு பெரிய வேப்பமரம். புதுத்தளிர் விட்டு பூத்துக்குலுங்கும். அந்த அழகான வேப்பமரம் தான், இந்த வெயிலிலிருந்து என்னைக் காப்பாற்றுகின்றது. அதுமட்டும் இல்லாமலிருந்தால்...! அந்த மரத்துக்குத் தினசரி 'தாங்ஸ்' சொல்லி அதைத் தஞ்சம் அடைகின்றேன்.

ஓரன்பர் தம் வீட்டுக்கொல்லையிலே வாழை மரங்களைப் போட்டார். வெயில் வேளையிலே அந்த மரங்களின் குளிர்ச்சியான நிழல் மிகச் சுகமாக இருப்பதாயும் மகிழ்ச்சியுடன் கூறினர்.

கோடையிலே இளைப்பாறிக் கொள்ள பிரதம மந்திரி முதலியோர் நுவரேலியா முதலிய இடங்களுக்குச் சுகத்துக்காகச் செல்லுகின்றார்கள். ஆனால் ஏனையோருக்கு அது முடியுமா? நமக்கெல்லாம் இந்தக் குளிர்தருவும், குடிசைவீடும் இருக்குமிடத்திலேயேசுகமளிக்கின்றன. ஏழைகளின்பால் அந்தக் கடவுளின் சருணை தான் எவ்வளவு!

மலைநாட்டிலுள்ள 'நாடற்றவர்களை' நினைத்தேன். அவர்கள் இவ்விஷயத்திலே அதிர்ஷ்டசாலிகள்தானே!

* * *

ஒரு பாட்டனைவிட பேரன் மூன்று வயது மூத்தவராம்! நம்பமுடிகிறதா? முந்தா நாள் காரைநகரில் நடந்த ஒரு மிருதங்க அரங்கேற்று வைபவத்தில் அவ்விருவரையும் நேரில் கண்டேன்!

மிருதங்க வித்வான் ராமநாதன்தான் இதைத் தெரிவித்தார். அவரது சீடர் அம்பலவாணர். அவரிடம் மிருதங்கம் பயின்ற வைத்திலிங்கத்தார், தம்மைவிட மூன்று வயது முதிர்ந்தவரென்றும் தமக்கு இவ்வளவு பெரிய பேரப்பிள்ளை, இருப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும் ஆசி கூறுகையில் கூறி வாழ்த்தினர்.

மன்னார் அவதான நிலையத்திலே உத்தியோகம் பார்க்கும் ஒரு பெரிய குடும்பஸ்தர், இந்தக் கலையில் ஆர்வம் கொண்டு நாற்பதுவயதுக்குமேல் அதைப் பயின்று, அரங்கேற்றமும் செய்தது பெரிய காரியம். அவர் சமூக சேவையிலும் ஈடுபட்டு, அன்னதானம் முதலிய கைங்கரியங்களைச் செய்பவர். ஊக்கமும், இறை அருளும் இருந்தால் எதுதான் கைகூடாது?

* * *

காரைநகர் சிவன் கோவில் மூலஸ்தான கல் திருப்பணி வேலை மும்முரமாக நடப்பதைக் கண்டேன். இந்தியாவிலிருந்து கல் தச்சர்கள் வரமுடியாமல் சில இடங்களில் திருப்பணி வேலைகள் தடைபட்டிருக்கையில், இங்கு எப்படி 'ஜரூராக' நடக்க முடிகிறதென்று விசாரித்தேன்.

(5-ம் பக்கம் பார்க்க)

"காஷ்மீர்

# இந்தியாவுடன் இணைந்தது: எந்தசக்தியாலும்பிரிக்கமுடியாது"

## நந்தா அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 16

காஷ்மீர், இந்தியாவுடன் இணைந்திருப்பது உறுதியானது, எந்தச் சதியினாலும் மாற்றமுடியாதது என்று இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய லோகசபையில் நேற்று நடைபெற்ற உள்துறை இலாகாவுக்கான செலவு கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில்தான் திரு. குல்சாரிலால் நந்தா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்ததென்பது வரலாற்று உண்மையென்றும் இதை எவராலும் மாற்றமுடியாதென்றும் கூறினர்.

காஷ்மீர் விஷயத்தில் நாட்டின் முடிவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் விஷமிகளைக் கண்டிப்பதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

நாட்டில் வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்தப் பத்திரிகைகள் முன்வரவேண்டுமென்றும் தவறான கருத்துக்களை வெளியிட்டு மக்களை பிழையான பாதையில் இழுத்துச் செல்லும் கருவிகளாகப் பத்திரிகைகள் மாறக்கூடாதென்றும் அவர் கூறினர்.

இந்தியாவில் சட்டவிரோதமாகக் குடியேறிய பாகிஸ்தானியர்கள் திரும்பிச்செல்ல வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்திய மந்திரி திரு. லால்பகதூர்சாஸ்திரி லோகசபையில் பேசியபோது துரதிருஷ்டவசமான சமயத்தில் திரு. அப்துல்லா விடுதலை செய்யப்பட்டிருப்பதாயும் அவரது நடவடிக்கைக்கு அளவுக்கு மீறி விளம்பரம் கொடுக்கக்கூடாது என்றும் கூறினர்.

# புத்தர், தாகூர் பிறந்த நாட்கள்

## அமெரிக்காவில் கொண்டாட்டம்

நியூயார்க், ஏப். 16

புத்தர், தாகூர் பிறந்த நாட்களை நினைவுபடுத்தும்பொருட்டு நியூயார்க் தாகூர் சங்கம், ஏப்ரல், மே மாதங்களில் பல நிகழ்ச்சிகளை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளது.

ஐ. நா. வில் இலங்கைத் தூதராக இருக்கும் சர். எஸ். குணவர்த்தன இம்மாதம் 24 ந் திகதி புதிய இந்தியா மாளிகையில் "புத்தரின் போதனைகளும் உலக சமாதானமும்" என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்' அன்றையதினம் "கௌதம புத்தர்" என்னும் திரைப்படமும் காட்டப்படும். சோதனை முறையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரலாற்றுப் படம், புத்தர் ஞானம் பெறுவதைக் காட்டுகிறது.

உலகப் புகழ்பெற்ற இந்திய அறிஞரும் கவிஞருமான டாக்டர் அமியா சக்ரவர்த்தி மே 8 ம் திகதி இந்திய விருந்தொன்றில் தாகூர்பற்றிப் பேசுவார். இந்த விழாவும புதிய இந்தியா மாளிகையிலேயே நடைபெறும். கவிஞர் தாகூரின் இலக்கியத்துறை செயலாளராகப் பத்தாண்டுகள் பணி புரிந்த டாக்டர் சக்ரவர்த்தி தற்போது பாஸ்ட்டன் பல்கலைக் கழகத்தில் கீழ்த்திசை மதங்கள், இலக்கியப் பிரிவுப் பேராசிரியராக இருக்கிருர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தாகூர் இலக்கியப் பிரிவுத் தலைவராகவும் அவர் இருந்தார்.

'சிவனை இறைஞ்சுதல்', 'இளம் பிறை' என்னும் தாகூரின் செய்யுள்களை அடிப்படையாகக்கொண்டு, உருவாக்கப்பட்டுள்ள நடனங்கள் மே 9 ம் திகதி சனிக்கிழமை பிறந்த நாள் விழா நிகழ்ச்சியொன்றில் நடைபெறும். பழமையான இந்திய நடனங்களில் திறமை படைத்த யு. எஸ். நடனமணி லல்லியும் பரத நாட்டியம், கதகளிநடனங்கள் ஆடிக்காட்டுவார். இந்திய நாடக ஆசிரியர் கிருஷ்ண ஷா, தென் ஆபிரிக்காவின் தலைசிறந்த ஜீவகாருண்ய ஊழியர் ஆலன் பேட்டன் ஆகிய இருவரும் சேர்ந்து எழுதிய 'ஸ்பொனேனே' என்னும் பிராட்வே நாடகமும் நடைபெறும்.

காஷ்மீர்

# "இந்தியாவை இழிவுபடுத்தும் தீர்வை ஏற்கமாட்டேன்"

## ஷேக் அப்துல்லா கருத்து

ஜம்மு, ஏப். 16

ஜம்முவில் ஒரு இடத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் திரு. ஷேக் அப்துல்லா பேசுகையில், பிரதமர் நேருவைத் தாம் சந்திப்பதைச் சிலர் தடைசெய்கிருர்கள் என்று கூறினர்.

திரு. ஷேக் அப்துல்லா நேற்று பல கூட்டங்களில் உரைநிகழ்த்தினர். அவர் தொடர்ந்து பேசுகையில், எல்லோருக்கும் திருப்தியளிக்கும் வகையில் காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்று கூறினர்.

காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்பதால் இந்தியாவுக்கோ அல்லது பாகிஸ்தானுக்கோ அழிவு ஏற்படக்கூடாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவை அவமானப்படுத்தும்வகையில் காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். காஷ்மீர் பிரச்னைக்கு ஏற்படும் தீர்வு இந்தியாவை அவமானப்படுத்தாததாக இருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு இந்திய-பாகிஸ்தான் தலைவர்களைச் சந்திப்பது மிகவும் அவசியமாகுமென்றும் திரு. ஷேக் அப்துல்லா கூறினர். திரு. ஷேக அப்துல்லா நாளை ஸ்ரீநகருக்கு விஜயம்செய்வார்.

ஸிரியாவில்

# புரட்சி நசுக்கப்பட்டது

டமாஸ்கஸ், ஏப். 16

மத்திய ஸிரியாவில் நேற்று ஏற்பட்ட புரட்சி நசுக்கப்பட்டதென்றும் புரட்சித்தலைவர் கைதுசெய்யப்பட்டுள்ளாரென்றும் டமாஸ்கஸ் வானெலி இன்று அறிவித்துள்ளது.

ஆயுதம்தரித்த சிலர் இந்தப் புரட்சியில் ஈடுபட்டிருந்தனர் என்றும் புரட்சியாளர்களுக்கும் அரசாங்கத் துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட புரட்சித் தலைவர் இராணுவக் கோர்ட்டில் விசாரணை செய்யப்படுவார் என்றும் புரட்சி நடைபெற்ற பகுதியில் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளதென்றும் டமாஸ்கஸ் வானெலி அறிவித்துள்ளது.

மத்திய ஸிரியாவில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச்சட்டத்தை மீறுபவர்களை சுட்டுத்தள்ளும்படி துருப்புக்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# "புரட்சி வேண்டாம்: வாழ்க்கைத்தரம்உயரவேண்டும்"

## குருஷ்சேவ் பேச்சு

மாஸ்கோ, ஏப். 16

சீனவின் புரட்சி மனப்பான்மையைக் கண்டித்த சோவியத பிரதமர் திரு. குருஷ்சேவ், பொருளாதார அபிவிருத்திதான் ஒரு நாட்டிற்கு முக்கியம் என்று தெரிவித்துள்ளார்.

சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவின் பிறந்தினத்தையொட்டி இங்கு வந்துள்ள கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் மத்தியில் அவர் உரைநிகழ்த்துகையில்தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நேற்று அரசாங்க மாளிகையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 1000 கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் சமூகமளித்திருந்தனர்.

திரு. குருஷ்சேவ் தொடர்ந்து பேசுகையில் பொருளாதார அபிவிருத்திக்கு முன்னர் புரட்சி தான் தேவையென்ற கம்யூனிஸ்ட் சீனவின் கொள்கை உலகில் பல அபாயங்களை ஏற்படுத்துமென்றும் புரட்சிக்கு முன்னர் பொருளாதார அபிவிருத்திதான் நாட்டுக்குத் தேவையென்றும் கூறினர்.

பொருளாதாரத்தில் முன்னேறவே ரஷ்யா பாடுபடுகின்றது. ரஷ்ய மக்களின வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். இதுவே சோவியத் அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாகும் எனறும் பிரதமர் குருஷ்சேவ் கூறினர்.

# 'இனப்போருக்கு அடிகோலுகிறது'

## தென்னபிரிக்கா மீது கண்டனம்

லண்டன், ஏப். 16

தென்னபிரிக்காவுக்கு பொருளாதார தடைவிதிப்பது சம்பந்தமாக லண்டனில் நடைபெறும் மகாநாட்டிற்கு பிரதமர் நேரு அனுப்பிய செய்தியொன்றில் தென்னபிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கைகள் உலக சமாதானத்துக்கு பெரும் அபாயத்தை ஏற்படுத்தக் கூடியதாகவிருக்கின்றனவென்றும் தென்னபிரிக்காவின் பாரபட்சமான இனத்துவேஷக் கொள்கைகளுக்கு எதிராக மகாநாடு ஸ்திரமான நடவடிக்கை எடுக்குமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தென்னபிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கைகள் மிகவும் அபாயபரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் இக்கொள்கைகள் இனப்போருக்கு வழிவகுக்கின்றனவென்றும் மகாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் தெரிவித்தனர். தென்னபிரிக்கா தனது பொருளாதாரத்தை வளம்படுத்தாமல் தனக்குக் கிடைக்கும் வருமானத்தை படைபலத்துக்கு உபயோகப்படுத்துகிறது என்றும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தென்னபிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கைகளை முறியடித்து எதிர்நோக்கிவரும் பேரபாயத்தைத் தடுப்பதற்கு தென்னபிரிக்காவில் ஸ்திரமான சர்வதேச தலையீடு தேவை என்றும் அங்கத்தினர்கள் வற்புறுத்தினர்.

## நிராகரிப்பு

அங்காரா, ஏப். 16

கிரேக்க அரசாங்கம் தெரிவித்திருந்தயோசனையொன்றை துருக்கி நிராகரித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் அறிவிப்பு

ராவல்பிண்டி, ஏப். 16

15,000 இந்திய முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்குள் நுழைந்துவிட்டதாகவும் இந்தியாவில் ஏற்பட்டுள்ள பல நெருக்கடிகளே இதற்குக் காரணம் என்றும் பாகிஸ்தான் வானெலி இன்று அறிவித்தது.

அஸ்ஸாமிலிருந்து 100 இந்திய முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கிழக்குப் பாகிஸ்தானில் குடியேறியிருப்பதாகவும் பாகிஸ்தான் வானெலி அறிவித்துள்ளது. இந்தியாவிலிருந்து முஸ்லிம்களை அகற்றும் வேலைகள் துரிதமாக நடைபெறுகிறதென்றும் இதற்காக பல உத்தியோகஸ்தர்களை இந்திய அரசாங்கம் நியமித்துள்ளது என்றும் பாக். வானெலி அறிவித்துள்ளது.

## பென்ஷன் உரிமை

புதுடில்லி, ஏப் 16

மேற்கு வங்காள அரசாங்கத்தின் புதிய திட்டத்துக்கிணங்க 30,000 பேர் பென்ஷன் உரிமை பெறுவார்கள்.

## மலேசியா பங்குபற்றும்

ஜகர்த்தா, ஏப். 16

அடுத்தவருடம் நடைபெறவிருக்கும் இரண்டாவது ஆசிய—ஆபிரிக்க மகாநாட்டிற்கு மலேசியாவையும் அழைக்கவேண்டுமென்ற கோரிக்கையை, ஆயத்த மகாநாடு ஏற்றுக்கொண்டது. ரஷ்யாவை அழைப்பதுபற்றி ஆயத்த மகாநாட்டில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## நாகர்கள் மறிக்கப்படுவர்

புதுடில்லி, ஏப். 15

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்களுடன் வரும் பகை நாகர் கோஷ்டியைமறிப்பதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி இன்று லோகசபையில் தெரிவித்தார். 4 மாதங்களுக்கு முன் 850 பகை நாகர்கள் ஆயுதம் பெறுவதற்காக கிழக்குப் பாகிஸ்தான் சென்றதாயும், நிறைய ஆயுதங்களுடன் அவர்கள் திரும்புவதாயும் திரு. சாஸ்திரி கூறினர்.

## 250 பேர் மாண்டனர்

சைகோன், ஏப். 16

வியட்னும் அரசாங்க துருப்புக்களுக்கும் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் 250 அரசாங்க துருப்புகள் மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கொரில்லாக்களில் உயிர்ச்சேதம் அதிகமென்றும் ஆனல் சேத விபரம் தெரியவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

## பிரிட்டன் ஏற்றுமதி

லண்டன், ஏப். 16

பிரிட்டனின் சென்ற வருட ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## 32 கம்யூனிஸ்டுகள் நீக்கம்

புதுடில்லி, ஏப். 16

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியசபைக் கூட்டத்திலிருந்து வெளி நடப்புச் செய்த 32 அங்கத்தவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தற்காலிகமாக விலக்கப்பட்டுள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய சபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபொழுது திரு. டாங்கேயின் கடிதம் சம்பந்தமாக விவாதம் ஏற்பட்ட சமயம் 32 அங்கத்தவர்களும் வெளிநடப்புச் செய்தனர். கட்சிக் கூட்டத்தில் சீன-ரஷ்ய ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலும் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டுள்ள 32 பேரும், தங்களது நடவடிக்கைகளைத் தொடர்ந்து நீடித்தால், கட்சியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## மேலும் புயல்

டாக்கா, ஏப். 16

கிழக்குப் பாகிஸ்தானில் வீசிய புயலினல் மாண்டவர்களில் 36 பேரின் சடலங்கள் இன்று அடக்கம் செய்யப்பட்டன. கிழக்குப் பாகிஸ்தானில் பல இடங்களிலும் நேற்று சுமாரான புயல் வீசியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கல்கத்தாவில் நில அதிர்ச்சி

கல்கத்தா, ஏப். 16

கல்கத்தாவில் நேற்றிரவு பத்து மணிக்கு நில அதிர்ச்சி ஏற்பட்டது. ஒரு நிமிடத்தில் இரண்டு தடவைகள் ஏற்பட்ட இந்த நில அதிர்ச்சி காரணமாக பொருள் சேதமோ அல்லது உயிர்ச்சேதமோ ஏற்படவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கராச்சியில் பிரிட்டிஷ் குழு

கராச்சி, ஏப், 16

நான்கு பேர் கொண்ட பிரிட்டிஷ் தூதுகுழு ஒன்று நேற்று கராச்சி வந்து சேர்ந்தது. இங்கு டெலிபோன் இணைப்பு சம்பந்தமான வேலைகளில் இவர்கள் கவனம் செலுத்துவார்கள்.

## ரால்ப்பஞ்ச்

புதுடில்லி, ஏப். 16

ஐக்கிய நாடுகள் உதவிக் காரியதரிசி திரு ரால்ப்பஞ்ச் நேற்று புதுடில்லி வந்துசேர்ந்தார்.

அரசியல் கலப்பற்ற நல்லெண்ண விஜயத்தையே தாம் மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

திரு. ரால்ப்பஞ்ச், நேற்று பாதுகாப்பு மந்திரி திரு. சாவன், இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் சௌத்திரி ஆகியோரைச் சந்தித்தனர். அவர் நாளைஜம்முவுக்குச் செல்வார்.

## கைலாசபிள்ளையார் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீகைலாசபிள்ளையார் கோவில் கொடியேற்றுவிழா வெள்ளிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றிரவு ஆசிரியர் திரு. வி. க. ஆறுமுகம் 'வள்ளி திருமணம்' என்பதுபற்றிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நடத்துவார்.

# "சமுதாயபுனரமைப்புக்குஉதவும் தேசியக் கல்வி வேண்டும்"

## இளைஞர் கழக ஆண்டுவிழாவில் கல்லூரி உப அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், வியா.

'எமது வேலைகளை நல்ல முறையில் செய்து நல்ல முறையில் வாழ்வதற்கு தேசம் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். நாட்டை நல்ல நிலைமைக்கு கொண்டுவர வேண்டுமானால் சில அசௌகரியங்களை அனுபவிக்கவேண்டியதும் அவசியமே" என்று காரைநகர் இளைஞர் சங்கத்தின் 19-வது வருடாந்த விழாவில் பேசுகையில் தேசிய ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.என்.சபாரத்தினம் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு. வி. தில்லைநாதன் தலைமை வகித்தார். யாழ். இந்துக்கல்லூரிஉப அதிபரான திரு. சபாரத்தினம் குறிப்பிட்டதாவது:

நாங்கள் அரசியலில் சிக்குண்டுள்ள காலம் இது. மிகவும் நெருக்கடியான காலத்தில் நாம் வசிக்கிறோம் இந்த நாட்டில் கல்விகூட அரசியல் சூழலிலே நடைபெறுகின்றது. இதை இப்பொழுது தவிர்த்துக்கொள்வது கடினமாகும். குழந்தையைப் பாதுகாப்பாக பெற்றெடுக்க தாய் பிரசவ வேதனைக்கு உட்பட்டே ஆகவேண்டும் என்பதுபோல நாடு முன்னேறவேண்டுமானால் நாம் இவ்விதமான பல கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிய தவசியம்.

நாட்டின் சகலதுறைகளின் அபிவிருத்திக்கும் அத்திவாரமாக அமைவது கல்வியே. இதுவரையும் பிரயோசனமற்ற கல்விமுறையைக் கையாண்ட நாம் இப்பொழுது தேசியக் கல்விபற்றி ஆலோசிக்கிறோம் 'தேசிய' என்பதை பிழையாக விளங்கிக் கொள்ளக்கூடாது. சமுதாய புனரமைப்பை உண்டு பண்ணக் கூடியவகையில் தேசியக்கல்வி அமையவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் 6—14 வயதுவரை கட்டாயமான அடிப்படைக் கல்வி பெறவேண்டுமென்ற வெள்ளை அறிக்கையின் சிபார்சு வரவேற்கத்தக்கது. கட்டாய அடிப்படைக் கல்விமட்டும் போதாது. முன்னேற்றமான செக்கண்டரி கல்வியும் அவசியம். இப்பொழுது ஒருமித்து இயங்கும் செக்கண்டரி கல்வியை அடிப்படை, செக்கண்டரி எனப் பிரிப்பது நல்லதல்ல. எந்தக் கல்விமுறையும் ஆசிரியர்களிலேயே தங்கியிருக்கிறது. ஆனால் ஆசிரியர்களின் பங்கைப் பொறுத்தவரை வெள்ளை அறிக்கை நல்லதாக இல்லை என்றே கூறலாம்".

# "சங்கீத வித்துவான்களை உருவாக்கும் பாடசாலைகள் இங்கு வேண்டும்"

## இசையாசிரியர் சங்க விழாவில் திரு. சோமசேகரம்

நல்லூர், வெள்ளி

சங்கீத வித்துவான்களை உருவாக்கும் பாடசாலைகளை இலங்கையில் நிறுவ வேண்டும். சங்கீதத்தில் சாதி, மத பேதம் காட்டக் கூடாது கலைஞர்கள் சகோதரர்களாக வாழ வகை செய்தல் அவசியம் என்று முன்னாள் உதவிவித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் அகில இலங்கை இசையாசிரியர் சங்கம் நடத்திய கலைஞர்கள் சேவை நலம் பாராட்டுவிழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

வண்ணை நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சி. உ. சோமசேகரம் மேலும் கூறியதாவது:

சங்கீதம் இந்நாட்டுக்குத் தேவை. உலகத்தில் எல்லா நாடுகளும் தமது சமூகத்திலே தான் நம்பிக்கை கொள்ள வேண்டும். எமது நாட்டில் போதிய கலைஞர்களை உருவாக்க வேண்டும். இந்தியக் கலைஞர்களைநாம் அளவுக்குமீறி வரவிட்டால் இந்நாட்டில் கலை வளர முடியாது. இதனால் தான் அரசாங்கம் கலைஞர்கள் வருகையை கட்டுப்படுத்தியுள்ளது. அடுத்தடுத்த வருடங்களில் முற்றாக இந்தியக் கலைஞர்கள் வருகை தடைப்படும். எனவே குறுகிய காலஎல்லைக்குள் போதிய கலைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும்.

சங்கீதக் கலைஞர்கள் தொகை அதிகரித்து பிறநாட்டுக்குச் செல்லும் பணம் மிச்சப்படுத்தப்பட வேண்டும். கலைஞர்கள் தமது பேதங்களை மறந்து ஒருவரை ஒருவர் கௌரவிக்கப்பழக வேண்டும்.

சங்கீதத்தை பக்தி, கலை ஆகிய இருபிரிவுகளிலும் உள்ளடக்கலாம் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளுக்குப் பக்திப் பாடல்களைப் போதிக்க வேண்டும். சங்கீதத்தை கலையாகப் பேணி பாதுகாக்க எல்லோராலும் முடியாது. சிறந்தவர்களைத் தேடி அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

இளைஞர்களுக்குப் பலதுறைகளில் ஈடுபாடு இருப்பதால் அவ்வத்துறை ஆசிரியர்களுக்கு கல்லூரிகளில் தகுந்த இடமளிக்கப்படுகின்றது. சங்கீத ஆசிரியர்களுக்கு ஆரம்பத்தைவிட இப்போது தகுந்தஅளவு ஊதியம் வழங்கப்படுகின்றது.

சங்கீத வித்வபூஷணம் (நாகசுரம்) என்னும் கௌரவப்பட்டம் திரு. என். எஸ். உருத்திராபதி, திரு எஸ். எஸ். அப்புலிங்கம், தவில் திரு. கே. முருகப்பா ஆகியோர்களுக்கும் சங்கீதகலாநிதி (சாஸ்திரம்) என்னும் பட்டம் திரு. கே. வேலாயுதபிள்ளைக்கும் சங்கீத கலாரத்தினம் என்னும் பட்டம் திரு. எஸ். வைத்தீஸ்வரசர்மா (வயலின்), திரு. கே. குமாரசாமி (வயலின்), திரு. எஸ். எஸ். இரத்தினம் (வாய்ப்பாட்டு) ஆகியோருக்கும் சங்கீத கலாமணி என்னும் பட்டம் இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரைக்கும் வழங்கப்பட்டன.

இவர்களின் திறனைப் பாராட்டி பண்டிதர் இ. திருநாவுக்கரசு, சி. விஜசித்தம்பி, பி. சந்திரசேகரம், சி. செல்லத்துரை ஆகியோர் பேசினர். திரு. பி. சந்திரசேகரம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

இந்த ஆண்டுவிழாவுக்குத் தலைமைவகித்த பதில் உதவி வித்தியாதிபதி திரு. தணிகாசலம் குறிப்பிட்டதாவது:

இசையாசிரியர்களின் போதனை கஷ்டமானது. விஞ்ஞான ஆசிரியர்கள் தமது கல்வியைப் பெரிதாகக்கருதுகிறார்கள். சமயரீதியில் பார்க்கப் போனால் விஞ்ஞானத்தினைவிட இசைக்குப் பெருமதிப்பு உள்ளது.

நாம் ஆங்கில ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் நமது சமயம், பண்பாடு என்பனவற்றுக்கு தகுந்த இடம் அளிக்கப்படவில்லை. இப்போதும் சரியான அந்தஸ்து சங்கீதத்திற்கு வழங்கப்படவில்லை.

இசை, நாட்டியம் என்பனவற்றுக்கு எதிர்காலத்தில் இடமளிக்கப்படும். இசையாசிரியர்கள் தமது முயற்சியினால் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் எத்தகைய கல்வியில் விருப்பமுடையவர்களாக இருக்கிறார்களோ அத்தகைய கல்வி ஆசிரியர்களுக்கு மரியாதை உண்டு.

நமது முன்னோர் பேணிப் பாதுகாத்துவந்த பண்பாடு, கலாசாரங்களை நிலைநாட்டும் வகையில் இசையாசிரியர்கள் தமது பாடத்தில் பெற்றோர்களை ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டும். அதற்கு இசைநிகழ்ச்சிகள் பெரிதும் உதவியாக இருக்கின்றன.

நாம் பிற இடங்களுக்குச் சென்று இசைக் கல்விபட்டதாரிகளாக வந்தாலும் எந்த இடத்திலும் சேவை செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். பொதுவாக யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர்கள் பிற இடங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பித்து வந்தாலும் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற முயற்சியிலேயே பெரிதும் நாட்டமுடையவராக இருக்கிறார்கள். இதனால் அவர்கள் அப்பகுதி பொதுமக்களின் நல்லெண்ணத்தைப் பெறத்தவறிவிட்டார்கள். ஆசிரியர்கள் எங்கு கற்பித்தாலும் மாணவர்களின் நலனில் சிரத்தை எடுக்க வேண்டும்.

—

## நீதிபதிக்கு வரவேற்பு உபசாரம்

நல்லூர், வியாழன்

பருத்தித்துறை மாஜிஸ்டிரேட்டாகக் கடமையாற்றிய திரு. அ. வைத்திலிங்கம் மாவட்ட நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்ற மகிழ்ச்சி குறித்து கருகம்பனை மக்கள் அவருக்கு மிகப் பெரிய அளவில் வரவேற்பு உபசாரனை வைபவம் நடத்தினர். கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய மண்டபத்தில் திரு. வ. சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்பு வைபவத்திற்கு முன்னர் நீதிபதி திரு. அ. வைத்திலிங்கம் கருகம்பனை வீதிகளால் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

பாராட்டு வைபவத்தில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. பெருமையினர், மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம், வலி-வடக்கு காரியாதிகாரி டி. முருகேசம்பிள்ளை, நகுலேஸ்வர வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. வ. கந்தையா, வழக்கறிஞர் திரு. எம். நமசிவப்பிரகாசம், திரு. என். வேலுப்பிள்ளை முதலானவர்கள் பாராட்டுரை வழங்கினர்.

திரு. அ. வயித்திலிங்கம் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

—

## பாராட்டு விழா

சுழிபுரம், வியாழன்

திரு. வே. ஐயாத்துரைக்கு சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்டதைக் கௌரவிக்கும் பொருட்டு, அராலி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் உபசாரனை விழா நடைபெற்றது.



## இன்னிசை விருந்து

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் ரசிக கலாமன்றத்தினரின் பெற்றார் தினவிழா சமீபத்தில் நடைபெற்றபோது இன்னிசை விருந்தளித்து ரசிகர்களின் பெரும்பாராட்டைப்பெற்ற கலாமன்ற பிரதம ஆசிரியர் திரு. இராசலிங்கம். விழாவில் இவரின் இசையாற்றலையும்சேவையையும் பாராட்டி பிரதேசகலாமன்றக்காரியதரிசியும் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபருமான திரு. எஸ். அம்பிகைபாகன் உரையாற்றினர். கோப்பாய் எம். பி. திரு.எம். பாலசுந்தரம் உட்பட பலர் விழாவில் கலந்துகொண்டனர்.

—

## உதவியாசிரியர்களுக்கு ஆசிரிய பயிற்சி

### மந்திரியிடம் முறையீடு

கொழும்பு, வியாழன்

நாட்டில் உள்ள உதவியாசிரியர்கள் பலர் பயிற்றப்படாத ஆசிரியர்களாக இருப்பதாகவும் அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டியது அவசியமென அகில இலங்கை அரசினர் ஆங்கில உதவி ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எம். ஏ. டான்வி பெரேரா கல்விமந்திரியிடம் தெரிவித்தார். மகரஹமை பயிற்சிக் கலாசாலைக்கு வெளிமாணவர்களை அனுமதிப்பதற்கு முன்னர் 10,000 உதவி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவேண்டுமெனவும் அவர் மந்திரியைக் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் போட்டிப் பரீட்சைகளுக்கு ஆசிரியர்களல்லாதவர்களைத் தோற்ற அனுமதிப்பது ஆசிரியர்களுக்கு இழைக்கும் அநீதியாகுமெனவும் திரு. பெரேரா மந்திரிக்குச் சுட்டிக்காட்டினர்.

—

## சுடப்பட்டனர்

பத்தேகம, வியாழன்

பத்தேகம கிராமசபை அங்கத்தவரான திரு. ஜெயசேகரா என்பவர் புதுவருட தினத்தன்று சுடப்பட்டார். புதுவருட தினத்தையொட்டி அயல்வீட்டுப்பெண்கள் இருவர் அவரது வீட்டில் அவருக்கு வெற்றிலை கொடுத்துக் கொண்டிருந்த போது அவர் சுடப்பட்டார். காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக கூறப்படுகிறது.

பத்தேகம் பொலிஸ் பகுதியில் புதுவருடத்தன்று மேலும் இருவர் சுடப்பட்டனர். அவர்களில் ஒருவர் மரணமானர்.

—

## டிக்கட் தட்டுப்பாடு

மக்கோனு, புதன

கடந்த சில வாரங்களாக மக்கோனு புகையிரத நிலையத்தில் களுத்துறை செல்வதற்கான பிரயாணச் சீட்டுகள் இல்லாமலிருப்பதால்பிரயாணிகள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். இங்குள்ள பிரயாணச் சீட்டு ஏஜண்ட் 10 அல்லது 15 பேருக்கு ஒரு சீட்டாகக் கையால் எழுதிக்கொடுக்கின்ஞர்.

# கைமோசக் கொலை புரிந்ததாய் எதிரி ஒப்புதல்

## அராலி கொலை வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

"பனங்கள்ளு யாழ்ப்பாணத்தின் தேசிய பானமாகிவிட்டது. அதை அளவுக்கு மீறிக் குடிப்பதனால் பனம் கள் காலத்தில் குற்றங்கள் மும்மடங்கு அதிகரித்துள்ளது. ஒருமித்துப போய் வண்டில் சவாரி செய்து விட்டு பின் ஒருமித்துக் கள் குடித்துவிட்டுச்சந்தோஷமாகப் போனவர்களுக்குள் சடுதியாகக் கலகம் ஏற்பட்டுவிட்டது. இறந்தவர் வெறியில் எதிரியின தாயை நீதியீனமாகப் பேசியதால் கோபமூட்டப்பட்டு எதிரி தாக்கியதாகத் தெரிகிறது".

இவ்வாறு அராலி மேற்கு கொலை விசாரணை முடிவில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா குறிப்பிட்டார்.

விசாரணை நேற்று நடைபெற்றபொழுது சமபவத்தை நேரில் கண்டதாகச் சாட்சியமளித்த ஒருவர் பொய்ச் சாட்சியம் அளிப்பதாக பல தடவை நீதியரசரினால் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் அராலி மேற்கைச் சேர்ந்த 38 வயது நிரம்பிய முருகேசு வீரசிங்கம் என்பவரை அதே ஊரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை குமாரசாமி என்பவர் கத்தியினால் குத்திக் கொலை செய்ததாக நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையாவின் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்டார்.

டாக்டர் சேவியரும், டாக்டர் ஏ. வைத்திலிங்கமும் சாட்சியமளித்த பின் அராலி மேற்கைச் சேர்ந்த 22 வயது வாலிபனை வேலுப்பிள்ளை வேதவனம்பிள்ளை சாட்சியமளித்[illegible] வேதவனம்பிள்ளை சம்பவத்தை விபரிக்கும்பொழுது பூனவிடை கடற்கரையிலுள்ள சவாரி ரோட்டில் வண்டி சவாரி செய்து விட்டு சாட்சியும், எதிரியும், இறந்தவரும், விஜசித்தம்பி என்பவரும் வண்டிலில் திரும்பி வந்ததாகவும் வழியிலிருந்த சின்னராசாவின் கள்ளுக் கொட்டிலில் சாட்சி தவிர மற்றும் மூவரும் கள்ளுக் குடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பும் பொழுதே இச் சம்பவம் நடைபெற்றதாகவும் கூறினர். வழக்கறிஞர் திரு. கணேசலிங்கம் குறுக்குவிசாரணை செய்தபொழுது சாட்சி முன்னுக்குப்பின் முரணாக பல சமயம் சாட்சியமளித்தபோது நீதியரசரினால் வன்மையாக எச்சரிக்கை செய்யப்பட்டார்.

அப்போது நீதியரசர் குறிப்பிட்டதாவது:

"பொய் சொல்ல முயற்சிக்கும் சாட்சிகள் 'ஞாபகமில்லை, 'சொல்லியிருக்கக்கூடும்' என்பன போன்ற சில பதங்களை தமது சொந்தமாக்கிக் கொள்ளுகின்றனர். இது போன்ற பொய்ச் சாட்சியம் அளிப்பவர்கள் இக்கோட்டியிலிருந்து தப்பிப்போக முடியாது. அப்படியானவர்கள் பலர் 3 மாதம் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். உன் போன்றவர்களைச் சிறைக்கு அனுப்பினால்தான் எனக்கு ஆறுதல். ஆனால் உன் போன்ற வாலிபர்களைச் சிறைக்கு அனுப்பி உமது வாழ்க்கையை பழுதாக்க நான் விரும்பவில்லை. உண்மையை ஒளியாது சாட்சியமளிக்காவிடில் சிறைக்கே அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை முடிவடைந்ததும், எதிரி விசாரிக்கப்பட்டார். சடுதியாக ஏற்பட்ட சம்பவத்தில் தாம் கைமோசக்கொலைக் குற்றம் புரிந்ததற்குக் குற்றவாளியென்று அவர் ஒப்புக்கொண்டதை நீதியரசர் ஏற்றுக் கொண்டார்.

எதிரி 24 வயது வாலிபன் என்றும் சாதாரணமாக நல்ல பழக்கவழக்கங்கள் உள்ளவரென்றும் ஒரு காலமும் குற்றப்படாதவரென்றும் கூறி அதைப்பற்றி அராலி மேற்குக் கிராம சேவகரின் சாட்சியத்தைக் கோர்ட்டில் சமர்ப்பிக்க அடுத்த புதன் (22-64-4)வரை அவகாசம் கொடுக்கும்படி வழக்கறிஞர் திரு. கணேசலிங்கம் நீதியரசரை வேண்டியதற்கு இணங்க நீதியரசர் தீர்ப்பையும் அடுத்த புதன் கிழமைக்கு ஒத்தி வைத்தார்.

முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டீ' சில்வா ஆஜரானர். திரு. எஸ். வல்லிபுரத்தின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் எதிரியின் சார்பில் ஆஜரானர்.

# நெல்லியடி சனசமூகநிலைய வருடாந்தவிளையாட்டுப் போட்டி

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடி சன சமூக நிலையத்தின் 16-வது ஆண்டுவிழா புதுவருடப்பிறப்பன்று நெல்லியடி பட்டினசபைத் தலைவர் திரு. வே. சு. பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

பிற்பகலில் வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டுப்போட்டியின் இடைவேளையின்போது பருத்தித்துறையைச் சேர்ந்த வீரர் திரு வி. எஸ். ஆனந்தனின் நெஞ்சின் மேல் லொறி ஏற்றுதல், கண்ணுடி தின்று தண்ணீர் குடித்தல் முதலிய சாகசச் செயல்களும் நடைபெற்றன.

ஒரு மைல் ஓட்டம்: வி. கதிர்காமத்தம்பி, எம். அருமைத்துரை, ஆர். சிவலிங்கம்.

தலையணைச் சண்டை: எஸ். சர்வானந்தன், இ. மதுரநாயகம்

குண்டெறிதல்: சி. செல்லத்துரை, செ. ஆறுமுகவேல், சி. வல்லிபுரம்.

விநோத உடைப்போட்டி: காதல் பைத்தியமாக நடித்த ஆ. சாந்தகுமார், குருடனாக நடித்த செ. சுவர்ணராசா, ஐரோப்பிய காதல் ஜோடிகளாக வந்த செல்விகள் இந்திராணி, சுசீலாதேவி.

பானை உடைத்தல்: க. சிவசுப்பிரமணியம்.

கயிறிழுத்தல்: தோட்டக்காரர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமிடையே நடைபெற்ற இப்போட்டியில் தோட்டக்காரர் வெற்றியீட்டினர்.

தடை ஓட்டம் சிரேஷ்டபிரிவு ஆண்கள்: கி. சிவஞானம், க. குலசிங்கம், க. பேரம்பலம்.

தலையில் குடம் வைத்து ஓடுதல் கனிஷ்டபிரிவு பெண்கள்: பி. மங்களேஸ்வரி, கே. நிர்மலாதேவி, ஏ. இந்திராணி.

பன்றிக்கு வால்வைத்தல் மத்திய பிரிவு ஆண்கள்: எஸ். விஜயகுமார், கே. கிருஷ்ணராசா.

தண்ணீரில் தோடம்பழம் எடுத்தல்: கே. சிங்கநாயகம்.

ஊசிநூல் கோத்தல் கனிஷ்டபிரிவு பெண்கள் (ஏ பிரிவு): நா. இராசமலர், எஸ். ஜெயலட்சுமி, எஸ். சந்திரபிரபா. (பி. பிரிவு): பி. மங்களேஸ்வரி, எம். இரத்தினேஸ்வரி, எஸ். சுசீலாதேவி.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி டி. எம். ஓ. திரு. எஸ். கதிர்காமத்தம்பியும் பாரியாரும் கலந்துகொண்டனர். வெற்றியீட்டிய வீரர்களுக்குத் திருமதி கதிர்காமத்தம்பி பரிசில்கள் வழங்கினர்.

பரிசளிப்பு விழாவில் நெல்லியடி பட்டின சபைத்தலைவர் திரு. வே. சு. பொன்னையா பேசுகையில், இத்தினங்களில் இத்தகைய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் சிறப்பிக்கமுடியும் என்ளூர்.

திரு. க. பாலசிங்கம், திரு. பரராஜசிங்கம் ஆகியோரும் பேசினர்.

## சரவணை சேவா மன்றம்

ஊர்காவற்றுறை, வியா.

சரவணை சேவா மன்றத்தின் 5-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் சரவணை கி.மு. சங்க 'சிவஞான' மண்டபத்தில் திரு அ. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சி. கணபதிப்பிள்ளை, உப-தலைவர்: திரு வி. பொன்னுத்துரை, காரியதரிசி: திரு. செ. சி. சம்பந்தன், உப-காரியதரிசி: திரு. வை. தியாகராசா, தனாதிகாரி: திரு. எஸ். எஸ். சிவம். நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### 17-4-64 வெள்ளி

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் – யோகாசிவசுப்பிரமணியம், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 பாட்டு– எஸ். குலசேகரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மதிப்புரை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, -130 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-00 கே. வி. காளிதாஸ்—பாட்டு.

மாலை 5-15 கோட்டூர் கே. என். ராஜரத்தினம்—நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-45 எம். எல். வசந்தகுமாரி—பாட்டு, 9-15 இசை மாலை.

## சென். அந்தனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

நீர்கொழும்பு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் சென். அந்தனீஸ் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென். அந்தனீஸ் கோஷ்டி வெற்றியீட்டியது. சென். அந்தனீஸ் 7 கோல்களும், நீர்கொழும்பு 1 கோலும் போட்டன.

## சம வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

இளங்கோ மன்றக் கோஷ்டிக்கும், யாழ். விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இளங்கோ மன்றக் கோஷ்டி தனது முதல் ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகள் நஷ்டத்துக்கும் 68 ஓட்டங்களையும் யாழ். விளையாட்டுக் கோஷ்டி 59 ஓட்டங்களையும் பெற்றன. இரண்டாவது ஆட்டத்தில் இளங்கோமன்றக் கோஷ்டி 4 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 84 ஓட்டங்களையும் யாழ். விளையாட்டுக்கோஷ்டி 6 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 79 ஓட்டங்களையும் பெற்றன.

ஆட்டம் இரு பகுதியிலும் விறுவிறுப்பாக நடந்தும் இறுதியில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## கென்னடி கோஷ்டி தோல்வி

சுழிபுரம், வியாழன்

தொல்புரம் கென்னடிகோஷ்டிக்கும் சுழிபுரம் வீரபத்திரர்கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற தாய்ச்சிப்போட்டியில் வீரபத்திரர் கோஷ்டி வெற்றிபெற்றது. போட்டி வழக்கம்பரை சனசமூக விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது. வீரபத்திரர்கோஷ்டி 21 பழங்களும், கென்னடி கோஷ்டி பழங்களும் எடுத்தன.

## துணையைத்தேட மின்சாரமூளை

ஸ்டட்கார்ட், (டாட்) ஏப். 16

மணமாகாத 26 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் 30 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் வாழ்க்கையில் சரியான துணையே கிடைக்காமல்போக நேரிடுகிறது என்று அரசாங்கம் வெளியிட்டுள்ள மக்கள் தொகைப் புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது. இப் பிரச்னையைச் சரிவரத் தீர்ப்பதற்காகவென்றே சில ஸ்தாபனங்கள் செயல்பட்டுவருகின்றன. ஆண், பெண்களுக்கு அவர்களுக்கு ஏற்ற ஜோடிகளை அவர்களுடைய பருவகாலத்துக்குள் கண்டுபிடிப்பதிலுள்ள கஷ்டங்கள் இத்தகைய ஸ்தாபனத்திற்குத்தான் நன்கு தெரியும். ஆனல் இதற்கு உதவிசெய்ய ஏன் மின்சார மூளையை உபயோகிக்கக்கூடாது என்று இப்போது யோசிக்கப்பட்டுவருகிறது. அமெரிக்காவிலும், ஸ்விட்சர்லாந்திலும் மின்சார மூளையின் உதவியைக்கொண்டு தனக்கேற்ற துணையைப் பெற முடிகிறதாம். இதைத் தொடர்ந்து இந்த ஸ்தாபனங்கள் மின்சாரமூளையை பயன்படுத்திக்கொள்வதில் முனைந்துவருகின்றன. "உங்கள் வாழ்க்கைத்துணையை மின்சார மூளையின் உதவியைக் கொண்டு தெரிந்து எடுங்கள்" என்று இந்த ஸ்தாபனங்கள் சீக்கிரமே விளம்பரம் செய்யலாம்.

## போர்த்தேங்காய் அடிப்போட்டி

காங்கேசன்துறை, வியா.

காங்கேசன்துறை குரு விளையாட்டுக்கழகம் புடவருடதினத்தன்று நடத்திய போர் அடிப் போட்டியில் அளவெட்டி கோஷ்டி வெற்றிபெற்றது. திரு. கே. கணேசலிங்கம் அளவெட்டிக் கோஷ்டியில் வெற்றி பெற்றவராவர். பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. வி. இரத்தினராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## புனிதவளன் வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

புனிதவளன் விளையாட்டுக் கழகத்துக்கும் இலங்கைப் பல்கலைக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் புனிதவளன் 2 கோல்கள் போட்டது. இலங்கைப் பல்கலைக் கழகம் கோல்கள் எதுவும் போடவில்லை. திரு. குமரஜயா மத்தியஸ்தம் வகித்தார்.

## வீடுகட்ட கடனுதவி

### அரசாங்க ஊழியருக்கு கிடைக்கும்

கொழும்பு, வியாழன்

அரசாங்க ஊழியர்களுக்கு வீடமைப்புக் கடனுதவி வழங்குவதற்காக அரசாங்கம் 25,000,000 ரூபா ஒதுக்கியுள்ளது.

வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு பண வசதியில்லாத அரசாங்க ஊழியர்களுக்கும் இரு வருட சம்பள முற்பணத்தில் காணிகளை வாங்கிக்கொள்ளும் அரசாங்க ஊழியர்களுக்கும் இக்கடனுதவி, தேசிய வீடமைப்புபகுதிமூலம் வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் ஒவ்வொரு அரசாங்க ஊழியருக்கும் 15,000 ரூபாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வீடு கட்டிக்கொள்வதற்காக இதுவரை சுமார் 2,000 அரசாங்க ஊழியர்கள் கடனுதவி கேட்டு மனுச் செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

## திறமையுள்ள . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களாகக் கருதப்படலாம் என்பதே எனது அபிப்பிராயம்.

சிங்கள பத்திரிகையாளர் ஒருவருக்கு ஆங்கில அறிவு அவசியம். ஆனல் ஆங்கில பத்திரிகையாளர்களுக்கு சிங்களம் தெரிய வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனல் அவர்கள் நம்நாட்டு பண்பாடுகளையும் சூழல்களையும் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

பத்திரிகைக் கந்தோரில் நிரந்தர உத்தியோகஸ்தர்களாக இல்லாது தனிப்பட்ட முறையில் இருந்து கொண்டு எழுதும் சுதந்திர எழுத்தாளர்களுக்கு சன்மானம்அளிப்பதை கடந்தசிலவருஷங்களாகபத்திரிகைகள் தவிர்த்துவருகின்றன. இதுபத்திரிகைதொழிலுக்குசரியானதல்ல. சுயேச்சை எழுத்தாளர்களை நகரத்தில் ஆறு மாதம் வேலை செய்த பின்னர் அவர்களை நிரந்தர பத்திரிகையாளர்களாக்குவது நல்லது. இப்படி வேலைக்கமர்த்த கம்பனிகளுக்கு முடியுமோ என்று யோசிக்கவேண்டியதில்லை. பத்திரிகையாளர்களாகப் பயிற்சி பெறுவதற்கு பட்டதாரிகளைத் தேர்ந்தெடுத்து பயிற்சியும் கொடுக்கிறூர்கள். ஆனல் அனுபவமும் திறமையும் உடைய பத்திரிகையாளர்களை வேலைக்கமர்த்திக்கொள்ளவில்லை. உதாரணமாக ஏரிக்கரைப் பத்திரிகை கம்பனியில் பட்டதாரிகளையே தேர்ந்தெடுத்து பத்திரிகையாளர்களாகப் பயிற்சியளிக்கிறூர்கள். ஆனல் இவர்களில் 75 சதவிகிததினர் அந்த வேலையை செவ்வனே செய்யமுடியாதவர்களாய் வேலையைவிட்டு விலகுகின்றனர் அப்படியிருந்தும் அக்ம்பனி எப்பொழுதும் பட்டதாரிகளையே வேலைக்கு அமர்த்த விரும்புகிறது.

ஒருபத்திரிகைக்கம்பனிக்குபத்திரிகையாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது பல காலமாக வெளியூர்களில் பத்திரிகையின் நிருபராயிருந்தவர்களுக்குச் சலுகை அளிக்கவேண்டும். ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர்களுக்கும், சிங்கள, பத்திரிகை ஆசிரியர்களுக்கும் சம சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே இங்கு வந்திருந்த இந்தியச் சிற்பிகளிடம் இங்குள்ளவர் நல்ல பயிற்சி பெற்றதாகவும் அவர்களே இப்போது இவ்வேலைகளைச் செய்வதாயும் மாதம் இவர்களுக்குச் சம்பளமாக சுமார் மூவாயிரம் ரூபாய் கொடுபடுவதாயும் அறிய 'டபிள்' மகிழ்ச்சியாக இருந்தது. வவனியாவிலிருந்து பல லொறிகளிலே கற்கள் வந்து, வேலை மேலான முறையில் நடந்துவருகின்றது. மலாயாவிலுள்ள அன்பர்கள் இத்திருப்பணியில் விசேஷ சிரத்தை எடுத்துள்ளதாகத் தெரியவந்தது.

இவ்வேலையுடன் ராஜகோபுரம், தேர் முதலிய திருப்பணிகளும் நடைபெற இருக்கின்றன, இவை பூர்த்தியானல் காரைநகரே புதுப் பொலிவும் புகழுமடையும்! பக்தியினல் எதுதான் சாதிக்க முடியாது!

* * *

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதானை, நற்பான்மை அறியாத நாயினேனை நன்னெறிக்கே செல்லும் வண்ணம் நல்கினானைப், பற்பாவும் வாயாரப் பாடியாடிப் பணிந்தெழுந்து குறைந்தடையார்பாவம்போக, கிற்பானைக் கீழ் வேளூராளுங் கோவைக்கேடிலியை நாடுமவர் கேடிலாரே.

—திருநாவுக்கரசர்

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## வரி விளம்பரம்

### தேவை

500 குழுப் கொங்கிறீற் வேலைக்கு மேசன், தொழிலாளர் உடனடியாகத்தேவை. கிறசர், மிக்சர், தள்ளுவண்டியாவும்உண்டு. தொழில்நிலையம் உடையார்கட்டுக்குளம், பரந்தன்-முல்லைத்தீவு ரூேட். கு. விவேகானந்தன், வல்வெட்டித்துறை அல்லது சனிக்கிழமை வேளையில் பெற்ரூேல் நிலையம், பரந்தன். 239

### மனேச்சர் தேவை

யாழ்ப்பாணம் பாங்சால் வீதியிலுள்ள அர்ச். அந்தோனியார் ஐக்கிய பண்டகசாலைக்கு மனேச்சர் தேவை. J. S. C. சித்தி அடைந்தவரும் ரூபா 1000/- பிணைப்பணம் கட்டக்கூடியவரும், இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் இம்மாதம் 20-ந் திகதிக்கு முன்னர் அடியிற் காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி, அர்ச். அந்தோனியார் ஐக்கிய பண்டகசாலை, 34, பழைய உப்பு மால், யாழ்ப்பாணம். 236

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### அரைச்சலர்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற கன்னகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

### காணி விற்பனைக்கு

வைமன் வீதியில் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது. N. ஆறுமுகம், 30, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 224

### விற்பனைக்குண்டு

"வாட்டா" ஜெர்மன் கார் பற்றரிகள், "பூ" வாக்கப்பட்ட டயர்கள் ராமகிருஷ்ணஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7179. 240


## துரிதப்படுத்த கோரிக்கை

கொழும்பு, வியாழன்

எண்ணைக் கம்பனிகளுக்கு நஷ்ட ஈடுகொடுப்பது பற்றி ஆராய்ந்து வரும் தொழிற் கோர்ட்டை தனது வேலைகளை துரிதமாக்கி மிக விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென நிதி மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

எண்ணைக் கம்பனிகளுக்கு நட்ட ஈடு வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் நாட்டுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

நஷ்ட ஈட்டைக்கொடுப்பதில் தாமதமாவதால்கம்பனிகளுக்கு நஷ்ட ஈட்டுக்கு ட்டியும் கொடுக்க வேண்டிவரும் எனவும் நிதிமந்திரி திறைசேரியின் தலைவருக்கு அனுப்பியுள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார். சுருக்கெழுத்தாளர்கள் தட்டுப்பாடு காரணமாகவோ அல்லது கம்பனி நிர்வாகிகளின்வசதிக்காகவோ அல்லது தொழில் கோர்ட் உத்தியோகத்தர்களின் வசதிக்காகவோகோர்ட்டின் வேலைகளை தாமதப்படுத்தக் கூடாது எனவும் திரு இலங்கரத்ன தெரிவித்துள்ளார்.

# நாடு எங்கும் கடும் வெப்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையின் பல பகுதிகளிலும் தற்பொழுது சீதோஷ்ண நிலை அதிகமாகக் காணப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், அநுராதபுரம், இரத்தினபுரி, மன்னார், புத்தளம், குருநாகலை, இரத்மலானை, அம்பாந்தோட்டை, கட்டுநாயக்கா, திருக்கோணமலை, கண்டி, மகா இலுப்பலாம ஆகிய இடங்களில் நேற்று கடுமையான வெப்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காங்கேசன்துறையில் சீதோஷ்ணநிலை 97 பாகையாகவிருந்தது. மற்றைய இடங்களில் வெப்பநிலை 90 பாகைக்கும் சற்று அதிகமாகவிருந்தது. தற்போதைய சீதோஷ்ணநிலை தொடர்ந்து நீடித்தால் காங்கேசன்துறையில் வெப்பநிலை 100 பாகை வரை அதிகரிக்கலாமென்று கொழும்பு அவதான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மற்றைய இடங்களிலும்பார்க்க வடக்கு, வடமத்திய மாகாணங்களின் வெப்பநிலை சற்றே அதிகரிக்கலாமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் எந்தப் பகுதியிலும் நேற்று மழை பெய்யவில்லை. ஆனல் மலைநாட்டுப் பகுதிகளில் சிறு தூற்றலுடன் மழைபெய்யலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இடதுசாரி முன்னணியின் மேதின விழா

## ஆறு இடங்களில் நடைபெறும்

கொழும்பு, வியாழன்

இடதுசாரி முன்னணி இம்முறை ஆறு இடங்களில் மேதினத்தைக் கொண்டாடவிருக்கின்றது.

கொழும்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் ஊர்வல கூட்டங்களில் கொழும்பில் நடைபெறவிருப்பதே மிகப்பிரமாண்டமானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டங்களில் சமசமாஜக் கட்சி, எம். ஈ. பி. கம்யூனிஸ்ட்கட்சிகளைச் சேர்ந்த பேச்சாளர்கள் கலந்துகொள்வார்கள். மூன்று கட்சி வாலிப முன்னணிகளும் கூட்டங்களில் பங்குபற்றும் இடதுசாரி முன்னணிக்கு ஆதரவாகவுள்ள தொழிற்சங்கங்கள்யாவும் கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளன.


றீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m.

Morning Shows

Sats. & Suns. at 10-30 a. m.

AUDIE MURPHY

JOHN SAXON

IN

POSSE FROM HELL

EASTMAN COLOUR



3வது மகத்தான புகழ் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)

மொடேர்ன் (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ராமசசந்திரன்—பி. சரோஜாதேவி

எம். ஆர் ராதா டி. ஆர். ராஜகுமாரி

மற்றும் பலர் நடித்த

பெரிய இடத்துப் பெண்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்று

மாலை 6-45 நல்லூர் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் திரு. வே. கந்தையா 'இருவினை ஒப்பும் மலபரிபாகமும்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். மாலை 7 மணி நல்லூர் கிழக்கு முத்தவிநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் "விநாயகர் பெருமை" என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார். மாலை 6 மணி வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய மண்டபத்தில் நவாலியூர் திரு. வை. நல்லையா "தடுத்தாட் கொண்டமை" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

●

யாழ்ப்பாணம் ரசிகரஞ்சன சபாவின் இசை விழா மாலை 6 மணிக்கு வண்ணை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் ஆரம்பம்.

5-00—5-15 விநாயகர் பூசை.

5-15—6-30 திரு. ஏ. எஸ். சின்னராசா கோஷ்டியினர்-தவில்.

6-30—6-45 யாழ்ப்பாணரசிகரஞ்சன சபா சங்கீதக் கல்லூரி மாணவர்கள்—பாட்டு.

6-45—7-30 திரு.எஸ். இராசையா—பக்திப்பாடல்.

7-30—7-45 தலைமையுரை—திரு. ரி. எஸ். துரைராசா மாநகர சபை முதல்வர்.

7-45—9-00 செல்வி எஸ். தங்கலட்சுமி — பாட்டு

9-00-10-15 திரு. சீ. செல்லத்துரை—பாட்டு.

10-15-11-13 திரு. வி. விஜிசித்தம்பி—சங்கீத கதாப்பிரசங்கம்.

●

மாதகல் துணைசை முருகமூர்த்தி கோவிலில் நடைபெறும் வருடாந்த உற்சவ விழாவில் இன்று பிற்பகல் சைவப் புலவர் பண்டிதர் வி. நவரத்தினம் "அழுதாலுன்னைப் பெறலாமே" என்னும் பொருள் பற்றி உரைநிகழ்த்துவார்.

# நாவலர் விளையாட்டுக் கழக புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வியாழன்

புது வருடத்தினத்தன்று நடைபெற்ற சரவணை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகிகள் தேர்தல் கூட்டத்தில் பின்வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. எஸ். எஸ். சிவம், தலைவர்: திரு.வி.பொன்னுத்துரை, உப தலைவர்: திரு: பி. சர்வானந்தன், காரியதரிசி, திரு. க. சிவயோகநாதன், உப காரியதரிசி: திரு. எஸ்.பாலேந்திரன், தனாதிரி: திரு. எம்.காசிவானந்தம்.

# சம்பவம் நடந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த இடத்தை நேரில் பார்வையிட விரும்புகிறீர்களா?" என்று ஜூரிசபையினரிடம் கேட்டதும் ஜூரிசபையினர் தங்களின் விருப்பத்தைத் தெரிவித்ததைத் தொடர்ந்து இன்று காலை சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்வதென முடிவு செய்யப்பட்டது.

கல்விழான் கொலை முயற்சி வழக்கு நேற்றுக் காலை நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ் வழக்கில் துணுக்காய் பகுதியிலுள்ள கல்விழானில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி கந்தையா கனகரத்தினம் அல்லது ராசு என்பவர் கந்தன் பசுபதியை சுட்டுக் கொலைசெய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திருவாளர்கள் வி. செல்லத்தம்பி, வி. கதிரவேலு ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக திரு. எஸ். அமிர்தலிங்கம் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டி' சில்வா ஆஜரானர்.

கந்தன் பசுபதி சாட்சியமளித்தார். திரு. கணேசலிங்கம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். டாக்டர் குகநாததாசனும் சாட்சியமளித்தார்.

மேல் விசாரணை மீண்டும் திங்கட்கிழமை நடைபெறும்.

# டிக்கட் மோசடி

கொழும்பு, வியாழன்

கள்ளத்தனமான சுவீப் டிக்கட்டை சமர்ப்பித்த வத்தகமவாசிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி மருதானைப் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபையின் மனேஜர் திரு எச். பி வீரரத்ன, இது பற்றித்தெரிவிக்கையில் உண்மையான டிக்கட்டை சமர்ப்பித்து முதற்பரிசான 50,000 ரூபாவை ஒருவர் பெற்றுக்கொண்ட சில நிமிடங்களுக்குள் போலி டிக்கட் சமர்ப்பிக்கப்பட்டதென்றும் உண்மையான பரிசு தலிங்கமவாசியொருவருக்குக் கிடைத்ததென்றும் கூறினர்.

# டாக்டர் புஞ்சே

புதுடில்லி, ஏப். 16

ஐ. நா. உதவிக் காரியதரிசி டாக்டர் ரால்ப் புஞ்சே பிரதமர் நேருவையும், ஸ்ரீமதி லஷ்மி மேனனையும் இன்று சந்தித்துப் பேசினர்.

# ஸ்தல இளைஞர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 6 வருடங்களுக்கு மேலாக நாளாந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களாக சுமார் 150 பேர் இங்கு வேலை பார்த்து வருகின்றனர். நாளாந்த சம்பளம் பெறுவோர் 6 மாதத்திற்குப் பின் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற விதி முறைகளுக்கு அமையாது அவர்கள் 5 மாத கால முடிவில் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பதில் புதிய தொழிலாளர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மறுபடி நாளாந்த சம்பள வேலை 6 மாத காலத்திற்கு வழங்கப்படுகிறது. இந்த ஒழுங்கீனமான நடவடிக்கை தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது, இதற்கு முற்றுப்புள்ளி வைத்து நாளாந்த சம்பளகாரரை 6 மாத காலத்திற்குப்பின் நிரந்தரமாக்கவேண்டும்.

# பிரதமர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக அமைதியாக இருக்கிறதென்றும் அவர் குறிப்பிட்டு கூட்டரசாங்க முயற்சியிலீடுபட்டுள்ளவர்கள் மிக்க சக்தி கொண்டுள்ளவர்களென்றும் இந்த முயற்சி வெற்றி பெறவேண்டுமென்றும் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்.

கூட்டரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக ஒரு சிரேஷ்ட மந்திரிக்கும் டாக்டர் என். எம். பெரேராவுக்குமிடையில் சில தினங்களுக்கு முன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலாபலன்கள் பற்றி இன்று மாலை நடைபெறவிருக்கும் லங்கா சமசமாஜக்கட்சியின் நிர்வாக சபைக்கூட்டத்தில் ஆராயப்படும்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் நுவரேலியாவுக்குச் சென்றுள்ளார். நுவரேலியாவில் இப்பொழுது தங்கியுள்ள பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவுடன் கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக இந்தப் பிரமுகர் பேச்சு வார்த்தை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை நடைபெறும் சமசமாஜக் கட்சியின் நிர்வாக சபைக்கூட்டத்தில், கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாகக் கட்சிக்குள் தோன்றியுள்ள கருத்துவேற்றுமைகளைத் தீர்ப்பதற்கு மே மாதத்திற்கு முன் கட்சியின் மகாநாட்டைக் கூட்டுவது பற்றி முடிவு செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# "சங்கீதப்போட்டிகள் நடைபெறவேண்டும்"

## இசையரங்கேற்றத்தில் பேச்சு

நல்லூர், வெள்ளி

"கர்நாடக சங்கீதம் மிகவும் விஸ்தீரணமானது. சங்கீதத்தின் பெருமையை அளவிட ஒரு சிலர் முயற்சிக்கின்றனர். சங்கீதத்தைக் கற்றவர்கள் அமைதியுடனும் பயபக்தியுடனும் தமது பணியைச் செய்வேண்டும்" என்று பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை நாவலர் பாடசாலையில் நடைபெற்ற இசையரங்கேற்றத்தில் பாராட்டுரை வழங்கும்போது குறிப்பிட்டார்.

அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக சங்கீதபூஷணம் செல்வி தருமலட்சுமி செல்லத்துரையின் இசையரங்கேற்றம் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது.

ஏராளமான சங்கீதக் கலைஞர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த அரங்கேற்றத்தில் செல்வி தருமலட்சுமியின் இசைத்திறனை நயந்து பாராட்டுரை வழங்குகையில் திரு. சங்கரப்பிள்ளை கூறியதாவது:-

வருடந்தோறும் பாடசாலைகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவது போல பாடசாலைகளுக்கிடையே சங்கீதப் போட்டிகள் நடத்தப்படவேண்டும். அப்போது தான் சங்கீதத்தின் தரம் உயரும்."

# வாக்கு கணிப்பு நிராகரிப்பு

ஸ்ரீநகர், ஏப். 16

வாக்கு கணிபபு மூலம் காஷ்மீர் பிரச்னைக்கு தீர்வு காண்பதையும், பிரிவினை யோசனையையும் கஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் நிராகரித்தார். காஷ்மீர் இதர ராஜ்யங்களைப் போலவே பாரதத்தின் ஒரு பகுதி என்றும் அவர் கூறினர்.

# டோக்கியோ செல்லும் தூது கோஷ்டி

கொழும்பு, வியாழன்

சர்வதேச கூட்டுறவு இயக்கத்தின் சார்பாக டோக்கியோவில் ஆரம்பமாகவிருக்கும் கூட்டுறவு மகாநாட்டில் கலந்து கொள்ள, ஐவர் அடங்கிய இலங்கைத் தூது கோஷ்டி இன்று புறப்பட்டது.

# ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அளவெட்டி வடக்கு கலா சேவா சனசமூக நிலையத்தின் 21-வது ஆண்டு நிறைவுவிழா நாளை சனிக்கிழமை வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. புதுமைலோலன் ஆகியோர் இக்கூட்டத்தில் பேசுவார்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி கெலிசம்மா சின்னத்துரை

கொழும்பு மாநகர சபை கஷ்ட நிவாரண அதிகாரியான இராஜதுரை, யாழ்ப்பாணம் வழக்கறிஞரும், மரண விசாரணை அதிகாரியுமான கனகரத்னம் ஜே. பி. யு. எம். இவர்களின் அன்புத்தாயாரும், இளைப்பாறிய அப்போதிகரி வி. ராசையா திருமதி இராசம்மா சரவணமுத்து ஆகியோரின் சகோதரியுமாகிய திருமதி கெலிசம்மா சின்னத்துரை காலமானர். அன்னரது சடலம், இன்று வெள்ளிக்கிழமை 17-ம் திகதி மாலை 4 மணிக்கு நல்லூர் "சிவஸ்தான்" இல்லத்திலிருந்து அந்திமைக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.